FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூலை - 2017
## Term Examination, July- 2017

| கிறிஸ்தவம் I | தரம் :- 12 (2018) | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

### பகுதி I

❖ **சரியான விடையைத் தெரிவு செய்து புள்ளடியிடுக.**

01. விவிலியத்தின் கிரேக்க மொழி பெயர்ப்பு
1) தனக் (Tanak) 2) செப்டுவாஜின்ற் 3) வல்கேட் 4) தோரா 5) சட்டம்

02. "ஒரு குடியை மற்றொருகுடி மேற்கொள்ளும்" என ஆண்டவர் முன்னறிவித்தது.
1) ரெபேக்கா 2) சாரான் 3) ஈசாக் 4) ஆபிரகாம் 5) யாக்கோபு

03. ஆண்டவர் அழைத்த போது 'இதோ நான்' என பதிலளித்தவர்
1) யாக்கோபு 2) சாமுவேல் 3) ஏசாயா 4) ஆபிரகாம் 5) மோசே

04. செழும்பிறை என அழைக்கப்பட்ட நாடு
1) எகிப்து 2) பெலிஸ்தியா 3) பலஸ்தீனா 4) ஆசிரியா 5) லெபனான்

05. அமலேக்கியர் இஸ்ரயேலருடன் போர்தொடுத்த இடம்
1) சீன் பாலைவனம் 2)சுக்கோத்து 3) ஏலீம் 4) இரபிதீம் 5) செங்கடல்

06. எருசலேமை இஸ்ராயேலரின் அரசியல், நிர்வாக மதத் தலைநகரமாக்கியவர்
1) தாவீது 2) சவுல் 3) சாமுவேல் 4) சாலமோன் 5) ரெகபெயாம்

07. இறை அன்பின் இறைவாக்கினர் என அழைக்கப்படுபவர்
1) எரேமியா 2) ஏசாயா 3) ஆமோஸ் 4) ஓசேயா 5) எசேக்கியேல்

08. ஆதி மனிதனுக்கு இறைவன் கொடுத்த முக்கிய கொடை
1) ஆன்மா 2) சுதந்திரம் 3) சரீரம் 4) புத்தி 5) ஞானம்

09. அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள்
1) நிறைவு பெறுவர் 2) கடவுளைக் காண்பர் 3) இரக்கம் பெறுவர்
4) ஆறுதல் பெறுவர் 5) கடவுளின் மக்கள் எனப்படுவர்

10. பாரசீகப் பேரரசின் ஆதிக்கத்தின் கீழ் எருசலேம் ஆலயம் ………………….. தலைமையில் மீண்டும் கட்டப்பட்டது.
1) எஸ்ரா 2) மக்கபேயு 3) செருபாபேல் 4) சைரஸ் 5) நெகேமியா

11. தலைமை சங்கம் நீதி விசாரணை செய்யும் ஒழுங்கு முறை பற்றிய விதிகள் கொண்ட நூல்
1) தோரா 2) கும்ரான்ஏடு 3) தனக் 4) மிஸ்னா 5) வல்கேட்

12. இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது புறக்கணிக்காது இருத்தல் வேண்டும் என்பதை விளக்கும் உவமை
1) வலை 2) கடுகு 3) புதையல் 4) முத்து 5) திருமணவிருந்து

13. இயேசுவின் திருச்சரீரத்தை சிலுவையிலிருந்து இறக்குவதற்குச் பிலாத்திடமிருந்து அனுமதி பெற்றவர்
1) நிக்கதேமு 2) கமாலியேல் 3) பேதுரு
4) சிரேனியு ஊர் சீமோன் 4) அரிமத்தியாவின் யோசேப்பு

14. இயேசு தனது சீடர்களுக்குப் பணியாள் தலைமைத்துவத்தை வலியுறுத்த சீடர்களின் பாதங்களைக் கழுவினார். இதனை எடுத்துக்கூறும் நற்செய்தி
1) மத்தேயு 2) யோவான் 3) லூக்கா 4) மாற்கு 5) மாற்கு, லூக்கா

15. சம நோக்கு நற்செய்திகளுக்கிடையில் காணப்படும் வேற்றுமைகளையும் ஒவ்வொரு நற்செய்தியிலும் உள்ள சிறப்பு நிகழ்ச்சிகளையும் விளக்கும் உத்தேசக் கொள்கை
1. வாய் மொழிப்பாரம்பரியக் கொள்கை
2. சம நோக்கு நற்செய்தி கொள்கை
3. நான்கு மூலக் கொள்கை
4. ஒன்றையொன்று தழுவிய இலக்கிய சார்புடைமைக் கொள்கை
5. இரு மூலக்கொள்கை

16. சீனாய் உடன்படிக்கையின் குறிக்கோளாக அமைவது
1. போர் வல்லமை கொண்ட இனமாக மாற்றுதல்
2. அரச குருத்துவ தூய மக்களினமாக மாற்றுதல்
3. உணவினால் திருப்திப்படுத்துதல்
4. விருத்தசேன சடங்கை கட்டாயப்படுத்தல்
5. அபிசேகம் செய்யப்பட்ட அரசர்களாக மாற்றுதல்

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு 17 – 20 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.
A – யாவே மரபு (J)
B – ஏலொகீம் மரபு (E)
C - இணைச்சட்ட மரபு (D)
D – குரமரபு (P)

17. நாடகப்பாணியும் இலக்கிய நடையும் கொண்ட மரபு
1) A 2) B 3) C 4) D 5) A, D

18. ஓய்வு நாளை முக்கியத்துவப்படுத்தும் மரபு
1) B 2) C 3) D 4) A 5) B,C

19. இறைவன் எல்லாவற்றையும் விட உன்னதமானவர்
1) A.B 2) C,D 3) A,C 4) A,D 5) B,D

20. போதனைகளையும் படிப்பினைகளையும் உள்ளடக்கிய மரபு
1) A 2) A,D 3) E,D 4) C 5) A, C

## பகுதி II

❖ பகுதி "அ" விலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி "ஆ" விலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிந்தெடுத்து நான்கு வினாக்களிற்கு விடை தருக.

### பகுதி அ

01.
1. இஸ்ரயேல் நாடு இரண்டாகப் பிளவுபட்டமைக்கான காரணங்கள் நான்கு தருக?
2. பஞ்சாகமத்தில் காணப்படும் மிக முக்கியமான மறை கருத்துக்கள் நான்கு தருக?
3. நீதித் தலைவர்கள் நிறைவேற்றிய விசேட பணிகள் நான்கு தருக?
4. மெசியாவின் சிறப்புப் பண்புகள் நான்கு தருக?
5. யூத சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டவர்களாக கருதப்படுவர்கள் நால்வரைத் தருக?

02.
1. பலஸ்தீனா தேசம் சிறப்பித்து அழைக்கப்படும் நான்கு பெயர்கள் தருக?
2. கிறிஸ்தவர்களின் இலத்தீன் விவிலியத்தில் பழைய ஏற்பாட்டில் காணப்படும் நான்கு பிரிவுகள் தருக?
3. யாவே மரபின் பண்புகள் நான்கு தருக
4. சீனாய் உடன்படிக்கையின் பத்துக்கட்டளைகளில் சமூகம் சார்ந்த கட்டளைகள் நான்கு தருக?
5. உடன்படிக்கையினால் இறைவனுக்கும் இஸ்ராயேலருக்குமிடையிலான உறவை வெளிப்படுத்தும் உருவகங்கள் நான்கு தருக?

03.
1. வாய்மொழிப் பாரம்பரியமாக இருந்த நற்செய்தி எழுத்து வடிவம் பெறுவதற்கான காரணங்கள் நான்கு தருக?
2. மத்தேயு நற்செய்தியாளர் இயேசுவே மெசியா என எடுத்துக்காட்டும் சந்தர்ப்பங்கள் நான்கு தருக?
3. மாற்கு நற்செய்தி எழுதப்படுவதற்கான காரணங்கள் நான்கு தருக?
4. இறையரசின் அடையாளங்களின் (புதுமைகள்) நான்கு வகைகளைத் தருக?
5. யோவான் நற்செய்தியில் காணப்படும் உயிர்த்த இயேசுவின் நான்கு தரிசனங்களை குறிப்பிடுக?

### பகுதி ஆ

01.
1. தூய யோவான் நற்செய்தியின் ஆசிரியத்துவத்தையும் நோக்கத்தையும் விளக்குக?
2. காலடிகளைக் கழுவுதல் சம்பவத்தினையும் அதன் மூலம் வெளிப்படும் கருத்துக்களையும் விளக்குக?

02.
1. முடக்குவாதமுற்றவரைக் குணப்படுத்திய சம்பவத்தினூடாக இயேசு பதிலளித்த மூன்று குழுவினரையும் இதனூடாக வெளிப்படும் படிப்பினைகளையும் எழுதுக?
2. "நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாகவும் உலகத்திற்கு ஒளியாகவும் இருக்கிறீர்கள்" என மத்தேயு நற்செய்தியாளரினால் முன்வைக்கும் சமூக ரீதியான சிந்தனையை விளக்குக.

03.
1. இஸ்ரேல் மக்கள் மத்தியில் பாஸ்கா விழாவின் முக்கியத்துவத்தையும் அவ் விழாவை எவ்வாறு கொண்டாடினார்கள் என்பதையும் விளக்குக?
2. விடுதலைப்பயண வரலாற்றில் இஸ்ரயேல் மக்கள் பெற்ற இறைபராமரிப்புக்கள் ஐந்தினை விளக்குக?

04. பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக?
1. திருமணவிருந்து உவமை
2. பரிசேயர்
3. சதுசேயர்
4. செக்கரியா இறவைாக்கினரின் அமைதியின் புதல்வனின் வருகை.